# 23 சமூக நீதி

**ஆமோஸ் இறைவாக்கினர் அன்றைய சமூக நிலைமைக்குள் நீதி மற்றும் நியாயத்திற்காகக் குரல் கொடுத்த விதமும் அதனை எவ்வாறு எங்கள் வாழ்க்கைக்குத் தொடர்புபடுத்தலாம் என்பதைக் கற்பது இப் பாடத்தின் நோக்கமாகும்.**

### ஆமோஸ் 4ம், 5ம் அதிகாரங்கள்

ஆமோஸ் இறைவாக்கினர் இஸ்ரயேல் தேசத்தில் வட இராச்சியத்தில் இறைவாக்குப் பணி ஆற்றினார்.

ஆமோஸ் தெற்குப் பகுதியிலே அமைந்துள்ள யூதா தேசத்தின் தெக்கோவா கிராம வாசி ஆவார். அவர் ஆடுகளை மேய்ப்பவராகவும் அத்தி மர வளர்ப்பினை மேற்கொண்டவராகவும் இருந்தார். அவர் தொழிலடைப்படையில் இறைவாக்கினராக இல்லாவிட்டாலும், இறைவாக்குப் பணியைச் சிறப்பாய் நிறைவேற்றிய ஒருவராக விளங்கினார்.

கி.மு 08ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இவர் இறைவாக்குப் பணியில் ஈடுபட்டார். அக்காலத்தில் வட இராச்சியத்தை இரண்டாம் எரோபவாம் அரசன் ஆண்டு வந்தான். இக்காலகட்டத்தில் தேசம் ஒருவகையில் பொருளாதார வளர்ச்சியைக் கண்டிருந்தது. வட இராச்சியம் சர்வதேச வியாபார மையமாகக் காணப்பட்டதால் மேலோட்டமாகப் பார்க்கும்போது பாரிய பொருளாதார அபிவிருத்தியைக் காட்டியது. இஸ்ரயேல் அரசன் மற்றும் நாட்டின் பிரபுக்கள் சிறப்பாக தலைநகராகிய சமாரியாவிலிருந்து பிரபுக்கள் மற்றைய நாடுகளிலுள்ள பேரரசர்களோடு அநேக பொருளாதார ஒப்பந்தங்களைச் செய்து கொண்டார்கள். இதனால் இவர்களுக்கு பாரிய இலாப நன்மைகள் கிட்டியதோடு; வேற்று நாட்டரசர்களுடன் மேற்கொண்ட ஒப்பந்தங்களை நிறைவேற்ற; ஏழைகளிடமிருந்து அதிகளவிலான வரி வசூலித்தனர், இதனால் செல்வந்த உத்தியோகஸ்தர்கள் மற்றும் பிரபுக்கள் மிகவும் ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்ததோடு ஏழைகள் மிகவும் வறிய நிலைக்குத் தள்ளப்பட்டனர், ஒடுக்கப்பட்டு சூறையாடப்பட்டனர். ஏழை மக்களைக் குறித்து செல்வந்த வியாபாரிகள் கொண்டிருந்த மனப்பான்மையை ஆமோஸ் பின்வருமாறு விபரிக்கிறார்; 'ஏழையைப் பணத்திற்கும், வறியவரைச் செருப்பு சோடியின் விலைக்கும் வாங்கலாம். அதாவது வறிய ஒருவரின் வாழ்வு ஒரு செருப்புச் சோடியின் பெறுமதியை விட அதிகம் இல்லை என அவர்கள் கருதினார்கள். இவ்வாறு அவர்கள் மனித பெறுமதியை மிகவும்

கீழ்மட்டத்திற்கு இழுத்துச் சென்றனர். சமாரி யாவைத் தலைநகராகக் கொண்ட செல்வந்தர் மிகவும் சொகுசான நகர்ப்புற வாழ்வை வாழ்ந்தார்கள்.

இருப்பினும் நகருக்கு வெளியே வாழ்ந்த விவசாயம், மேய்ப்புப் பணி மற்றும் ஏனைய கூலித்தொழிலில் ஈடுபட்டோருக்கும் நகர்ப்புற செல்வந்தர்களுக்கும் இடையில் பாரிய இடைவெளி காணப்பட்டது. இது சூறையாடல் மற்றும் ஏழைகளின் சொத்துக்களை அபகரித்தமையால் ஏற்பட்ட விளைவாகும்.



ஆமோஸ் கண்ட தூக்கு நூல் குண்டின் காட்சி

**வாசித்துப் பார்ப்போம்**

## ஆமோஸ் 4, 5 அதிகாரங்கள்

### அநீதி அநியாயத்திற்கு எதிராக

ஆமோஸ் இறைவாக்கினர் இறைவாக்குகள் சிலவற்றை நாம் இங்கு பார்ப்போம். (ஆமோஸ் 4,5 அதிகாரங்கள்) சமாரியாவில் வாழ்ந்த செல்வந்தர்களின் மனைவிகளை ''பாசான் பசுக்கள்'' / ''கொழுத்த பசுக்கள்'' என்று ஆமோஸ் இறைவாக்கினர் குறிப்பிட்டார். அவர்கள் ஏழைகளை ஒடுக்கி, வறியோரை நசுக்கியதால் இவ்வாறு ஆமோஸ் அவர்களை அழைத்தார். அதனால் இறைவனின் தீர்ப்புக்கு அவர்கள் ஆளாவார்கள் என்பதையும் குறிப்பிட்டார்.

அவ்வாறே செல்வந்தர்கள், மக்களுக்கு நீதி நியாயம் கிடைக்கப்பட வேண்டிய சந்தர்ப்பங்களில் அதற்கு மாறாக செயற்பட்டனர். அவர்கள் இலஞ்சம் (கையூட்டு) கொடுத்தும் இலஞ்சம் பெற்றும் ஏழைகளுக்கு நீதி நியாயம் கிடைப்பதைத் தடுத்தனர். ஆமோஸ் (5:12).

### மனம் மாறிட மக்களுக்கு அழைப்பு

மக்கள் மனம் மாறி கடவுளைத் தேடி வருவதற்கு பல வழிகளில் கடவுள் செயற்பட்டாலும், மக்கள் அதை விளங்கி நடந்துகொள்ளத் தவறிவிட்டார்கள் என்று ஆமோஸ் அறிவித்தார்.

இறைவன் மழையைத் தடுத்து பஞ்சத்தை ஏற்படுத்தியும் அவர்கள் இறைவன் பக்கமாகத் திரும்பவில்லை (ஆமோஸ் 4:6,7).

இவ்வாறானவர்களுக்கு எதிராக கடவுள் கொடுக்கும் தண்டனையை ஆமோஸ் அறிவித்ததுடன், மெய்யான மனம் திரும்புதலினூடு இறைவன் பக்கமாகத் திரும்பும் படி மக்களுக்கு அழைப்புவிடுத்தார் (ஆமோஸ் 4:8, 5:6).

### படைக்கும் பலிகள் அர்த்தமற்றதென்பது

இஸ்ரயேல் மக்கள் அநீதியான வாழ்க்கை வாழ்ந்துகொண்டே சமயக் காரியங் களிலும் ஈடுபட்டனர். அவர்கள் பத்தில் ஒரு பங்கைச் செலுத்தி, புளித்த மாவின் அப்பத்தைப் படைத்தார்கள் (ஆமோஸ் 4:4) பெயேல்செபா, பெத்தேல், கில்கால் ஆகிய இடங்களில் அநேக சமய ஸ்தலங்களுக்குச் சென்ற இவர்களுக்கு ஆமோஸின் அறிவுரையாவது 'அவ்வாறு செல்வதனால் பயனில்லை' என்பதாகும். ஆமோஸ் 4:5). அதனால் பயனேதுமில்லை என்பது மாத்திரமல்ல கடவுள் அவர்களுடைய விழாக்களை வெறுக்கின்றார் என்றும் எரிபலிகளையும், தானியப் படையல்களையும் ஏற்க மாட்டார் என்றும் கூறுகிறார். (ஆமோஸ் 5: 21, 22)

### அனைத்தும் வல்ல கடவுளின் தீர்ப்பு

ஆமோஸ் தன் இறைவாக்குரைப்பில் கடவுளின் தீர்ப்பைக் குறித்து குறிப்பிடு கையில் கடவுள் 'அனைத்தும் வல்ல கடவுள்' என்று அறிமுகப்படுத்துகிறார். இதனால் கடவுளின் வல்லமை மற்றும் மகிமை விபரிக்கப்படுகிறது. அவர் அநீதி மற்றும் அநியாயமாகச் செயற்படுவோரை தீர்ப்புக்குள்ளாக்குவதோடு ஏழைகள் சார்பாக நின்று அவர்களைக் காக்கும் வல்லமையான கடவுள் என்பதை மேலும் விபரிக்கின்றார்.

## ஆமோஸின் செய்தியை எங்கள் வாழ்க்கைக்கு உரியதாக்குவோம்

### நீதியைக் குறித்து அறிதல் மற்றும் கரிசனையாய் இருத்தல்

நாங்கள் வாழும் உலகில் அநீதி அரசாளும் சந்தர்ப்பம் அதிகரிக்கின்றது. தொழில் துறையைக் குறித்து சற்று அவதானிப்போம். உதாரணமாக ஒரே தகைமையுள்ள இருவர் தொழிலுக்காக விண்ணப்பிக்கும்போது செல்வாக்கு உடையவருக்கு அந்த

தொழில் வாய்ப்பைப் பெற முடியும். இதனால் தகுதி உடைய மற்றவருக்கு அநீதி இழைக்கப்படுகிறது. மத மற்றும் இன அநீதிகளையும் நாம் அடிக்கடி காணலாம். இதன்போது கிறிஸ்தவர் ஒருவரின் கடப்பாடு யாதெனில் இவ்வாறான சந்தர்ப் பங்களைக் குறித்து அவதானமாகவும் அறிவுடையவர்களாகவும் இருக்க வேண்டும். ஆமோஸ் இறைவாக்கினர் அறிவிக்கும் ''நீதி வெள்ளமெனப் பொங்கி வரவும், நேர்மை வற்றாத ஆறாகப் பாய்ந்து வரவும்'' (ஆமோஸ் 5:24) என்பது அனைத்து சமூகங்களின் செயற்பாடுகளுக்கும் முக்கியமாகும்.

## கடவுளும் நீதியும்

நாம் விளங்கிக்கொள்ள வேண்டிய முக்கியமான விடயம் யாதெனில் கடவுள் அனைவரதும் தந்தையாகிய கடவுள் என்பதால் அவரே நீதியை நிலைநாட்ட இடைப்படுவார் என்பதாகும். கடவுளாகிய இயேசு நாசரேத்து ஊருக்கு வந்து ஆற்றிய முதல் அருளுரையில் இவ்விடயங்கள் மிகவும் தெளிவாகின்றன. (லூக்கா 4: 18-19)

### செயற்பாடுகளில் ஈடுபடல்

இவ்வாறான நேரங்களில் முதலாவது செயற்பாடாவது வழிபாட்டில் கடவுளுக்கு இவ்விடயங்களை முன் வைத்தலாகும். நாம் வழிபாட்டில் ஈடுபட்டிருக்கும்போது கடவுள் நீதியையும் நியாயத்தையும் நிலைநாட்ட எங்களுக்குப் பல வழிகளைக் காண்பிப்பார். குற்றங்களைச் சுட்டிக்காட்டல், பத்திரிகைகளுக்கு எழுதுதல், சமூக அநீதிகளுக்குச் எதிர்ப்பு தெரிவித்தல் ஆகியன அவ்வாறான செயற்பாடுகளில் சிலவாகும். இதற்கு எமது நிலைமை முக்கியமானதல்ல. முக்கியமானது எதுவென்றால் எமது வழிபாடு கடவுளின் விருப்பத்திற்கு அமைய நடைமுறைப் படுத்தப்படுவதாகும். அப்போது வழிபாடு கடவுளுக்கு ஏற்புடையதாக இருக்கும்.

### தனிப்பட்ட அர்ப்பணிப்பு

இறையரசை நாம் இலக்காகக் கொள்ள வேண்டும் என இயேசு எமக்கு கற்பித்துள்ளார். நீதியையும் நியாயத்தையும் நிலைநாட்டுவது இவ்விலக்கின் முக்கிய பங்காகும். இந்த இலக்கை நோக்கி நாம் செல்லும்போது கடவுளில் தங்கி, தனது காலத்தையும் சிரமத்தையும் ஈந்து, அர்ப்பணிப்போடு செயலாற்ற வேண்டுமென்பது அவர் எதிர்பார்க்கும் விடயமாகும். நாமும் தற்கால சமூகத்திலே அவ்வாறாக அர்ப்பணிப்புடன் செயற்பட முயல்வோம்.

**செயற்பாடு**

01. ஆமோஸ் 4ம் மற்றும் 5ம் அதிகாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ள சமூக அநீதிகளைக் குறித்து தகவல்களைச் சேகரியுங்கள்